செலுத்தியவுடன் அமைச்சர் அவர்கள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை கட்டுவதற்கு வேண்டிய வசதிகளை செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் பெறுவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்தால் அரசு 50 விழுக்காடு தொகையை தருவதற்கு தயாராக இருக்கிறது என்பதை முன்பே தெரிவித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 119, திரு. கோ. காளன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

119—

அம்பத்தூரில் உள்ள முருகப்பா நூலகத்தை விரிவுபடுத்தல்

***35767**-திரு. கோ. காளன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அம்பத்தூரில் இயங்கி வரும் முருகப்பா நூலகத்தை விரிவுப் படுத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அம்பத்தூரில் இயங்கிவரும் முருகப்பா நூலகம் முழுநேர நூலகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நூலகத்தின் கட்டடத்தை விரிவு படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய இணைப்புக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், இந்நூலகத்தின் பயன்பாடு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.15

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகப்பா நூல் நிலையம் 1971—ஆம் ஆண்டு மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஏறக்குறைய 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் அந்த நூலகத்திலே சேர்ந்திருக்கிறார்கள். அன்றாடம் 300-க்கு மேற்பட்டவர்கள் அங்கே படிக்கிறார்கள். 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் அங்கே இருக்கின்றன. அந்த இடம், அம்பத்தூர் நகராட்சியில் 1 லட்சம் ஜனத்தொகை

இருந்தபோது கட்டப்பட்டது. இன்றைக்கு 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை என்கிற அளவிற்குப் பெருகியிருக்கிறது. அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல், அது 'ஏ' கிரேட் நூலகமாக இருந்தாலும்கூட, 'சி' கிரேடைவிட மிகக் குறைவான சூழ்நிலையில் அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. பணியாளர்களைப் பொறுத்தவரையில், அந்த நூலகத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி 9 பேர்கள் இருக்கவேண்டும். ஆனால் 4 பேர்கள்தான் இருக்கிறார்கள். மேலும் அங்கேயுள்ள புத்தகங்களை எல்லாம் வைப்பதற்குத் தேவையான 'கப்போர்ட்' வசதிகள் எதுவும் இல்லாமல் இருப்பதால், தரையில் வைக்கப்பட்டு சேதாரம் அடையக்கூடிய நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணைக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு விரிவுப்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை எப்போது செய்வார்கள் என்று அவர்கள் குறிப்பிடவில்லை. அவர்கள் கூறியதற்கு என்னுடைய 'நன்றி' அதை எப்போது விரிவு படுத்துவார்கள், அங்கே நல்ல வசதிகளை எப்போது அமைத்துத் தருவார்கள் என்பதை நான் உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடத்தை விரிவுபடுத்துவதற்கான திட்ட மதிப்பீடு கோரப்பட்டு இருக்கிறது. விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடன் புதிய இணைப்புக் கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். தொழில் நகரமான அம்பத்தூரில் உள்ள நூலகம் விரிவுபடுத்தப்படவேண்டுவது இன்றியமையாத ஒன்று என்பதை அரசு உணர்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற குறைகளைப் போக்குவதற்கும், கட்டிடம் விரிவுபடுத்தப் பட்டபின்பு, நூலகத்தை விரிவுபடுத்துவதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகராட்சியின் மூலமாக நூல் நிலைய வரி வசூலிக்கிறார்கள். ஏறக்குறைய 1993-94-ஆம் ஆண்டு வரை 20 லட்சம் ரூபாய் நூல் நிலைய வரியாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரியிலேயிருந்து அம்பத்தூர் நகராட்சி, ஒரு பைசாவைக்கூட நூல் நிலைய அபிவிருத்திக்காகக் கொடுக்கவில்லை அந்தக் காலத்திலே பஞ்சாயத்து போர்டாக இருந்தபோது, ஒவ்வொரு இடத்திலேயும், சில வாசகசாலைகளை அம்பத்தூரிலும், கொரட்டூரிலும் இன்னும் இப்படி சில இடங்களிலேயும் வைத்தார்கள். நூல் நிலைய வரியை வசூல் செய்து, அம்பத்தூர் நகராட்சியிலே வைத்துக் கொள்கிறார்களே, தவிர, நூல் நிலையத்தின் அபிவிருத்திக்காகக் கொடுக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வசூலிக்கப்பட்ட அந்த வரியை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு

நகராட்சி மூலமாக தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் நிலைய வரி வசூலிக்கப்பட்ட பின்பும் நூலகத் துறைக்கு வந்து சேரவில்லை என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு நடந்த அலுவலர்கள் கூட்டத்திலே விவாதித்து ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். விரைவில் அந்த நிதியைத் தருவதாக வாக்களித்து இருக்கிறார்கள். இங்கே, நிதிப் பிரச்சினை இல்லை. திட்ட மதிப்பீடு இன்னும் வந்து சேரவில்லை. அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நூல் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்கும், நூல் நிலைய வரி இன்னும் வரவில்லை என்பதற்கும் தொடர்பு இல்லை. நிதி இருக்கிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூல் நிலைய வரியைப் பெறுவது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பேசி இருக்கிறோம். அது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 120, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

120—

பேரூராட்சிகளில் மீன் வளர்ப்பு பயிற்சி மையம் அமைத்தல்

*** 26612—***திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி, மற்றும் ஊஞ்சலூர் பேரூராட்சிகளில் மீன்வளர்ப்பு பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம் உள்நாட்டு மீன்வளர்ப்பு பணி நிறுவனம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி மற்றும் உஞ்சலூர் பேரூராட்சிகளில் மீன்வளர்ப்பு பயிற்சி மையம் அமைக்கும் கருத்துரு/செயற்குறிப்பு தற்பொழுது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.